# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,727/8 — 1966 දෙසැම්බර් 28 වැනි බදාදා — 1966.12.28

14,727/8 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை பிரமாண விதித்தல் சட்டநிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை இல. 251

171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4(1) (i) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொகொத்தாலாகே டிங்கிரி பண்டா, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எவ்வித அரிசியையும் எத்தொகையாயினும் இலங்கைக்குள் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவரது சார்பில் உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டின்பேரில் அல்லாது, அல்லது உத்தரவுச் சீட்டில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்பேரிலும் தவிரக் கொண்டுசெல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடைவிதிக்கிறேன்.

மேற்கூறப்பட்டுள்ள இக்கட்டளை பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்படமாட்டாது :

(அ) எத்தொகையான உள்நாட்டரிசியையும் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச்செல்லல் ;

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வித அரிசியையும் எவ்வொருவரோ கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ;

(இ) அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தை வைத்திருக்கும் எவ்வொருவரோ அப்புத்தகத்திலுள்ள கூப்பன்பேரிற் பெற்ற அரிசியை வாங்கிய இடத்திலிருந்து தான் வசிக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ; அல்லது

(ஈ) பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை அல்லது உத்தரவுச் சீட்டை வைத்திருப்பவர், அப்பற்றுச்சீட்டின் பேரிலோ அல்லது உத்தரவுச் சீட்டின் பேரிலோ பெற்ற அரிசியை வாங்கிய இடத்திலிருந்து அம்மொத்த வியாபாரியினதோ அல்லது கூட்டுறவுச் சங்கத்தினதோ அல்லது உத்தரவுபெற்ற வியாபாரியினதோ பற்றுச்சீட்டில் அல்லது உத்தரவுச் சீட்டில் குறிப்பிட்ட பண்டகசாலைக்கோ அல்லது இடத்துக்கோ கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்.

மேற்காணும் (ஈ) கூட்டிற் குறிப்பிட்டுள்ள " மொத்த வியாபாரி " என்பதன் பொருள் 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் (ஈ) தலையங்கத்தின் மூன்றும் பாகத்தின் ஐந்தாம் பிரமாணத்தின்கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் கட்டுப்படுத்தப்பட்ட பொருளைக் கூட்டுறவுப் பண்டகசாலைக்கோ அல்லது கூட்டுறவுக் கடைகளுக்கோ அல்லது உத்தரவுபெற்ற வியாபாரிகளுக்கோ விநியோகம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட 1949 ம் ஆண்டின் 21 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட 1936 ம் ஆண்டின் 16ம் இலக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் சட்டத்தின் 6 ம் பிரிவினால் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு மொத்த நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தகைமை வாய்ந்தவரும் தகுதியுடையவருமான ஒருவர்.

மேற்காணும் (ஈ) கூட்டிற் குறிக்கப்பட்டுள்ள " உத்தரவுபெற்ற வியாபாரி " என்பதன்பொருள் 1952 ம் ஆண்டின் உணவுக்கட்டுப்பாட்டுப் பிரமாணத்தின் " ஈ " தலையங்கத்தின் மூன்றும் பாகத்தின் ஐந்தாம் பிரமாணத்தின்கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பொருளைக் குறிப்பிட்ட இடங்களின் நிறுவனங்களுக்கோ அல்லது குழுவினருக்கோ விநியோகம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு வர்த்தகர் அல்லது தகைமை வாய்ந்தவரும் தகுதியுடையவருமான ஒருவர்.

கொழும்பு 2,
1966 ம் ஆண்டு மார்கழி மீ 22 ந் டை.

எம். டீ. பண்டா,
விவசாய உணவு அமைச்சர்.

12-1460

## 1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 33 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கைத்தொழில், கடற்றொழில் மந்திரி டொன் பிலிப் ரூபசிங்க குணவர்த்தனவாகிய நான், இந்தக் கட்டளையின் பிரகாரம், மேற் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் 2 வது பிரிவின் கீழ் பிறபபிக்கப்பட்டதும், 1958 ம் ஆண்டின் ஜனவரி 10 ந் திகதிய 11,237 ம் இலக்க விசேஷ கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதுமான இணைப்புக் கட்டளையினால் ஸதாபிக்கப்பட்ட தேசிய ஜவுளி கூட்டுத்தாபனம், ஓர் கூட்டுத்தாபனமான தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் தேவைகளுக்கு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் உத்தேச கொள்வனவை அங்கீகரிக்கிறேன்.

கொழும்பு,
26, திசெம்பர் 1966.

டீ. பீ. ஆர். குணவர்தன,
கைத்தொழில் கடற்றொழில் மந்திரி.

| துண்டு இல. | காணியின் பெயரும், சொந்தக்காரரும் | விஸ்தீரணம் ஏ. ரூ. பே. | எல்லைகள் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | பஸ்யால மக்கனிக்கொடையைச் சேர்ந்த எல். ஜீ. ஹண்டி சிங்கோ, நன்கல்லா, அமரகோன் மூல்லையைச் சேர்ந்த எம். பி. நிலாமே, நன்கல்லா, மன்கெதரையை சேர்ந்த ஈ. ஏ. எக்கநாயக்கா, வத்தளை ஹெக்கிதாவைச் சேர்ந்த ஈஸ்ரெல்லா ரோக்ஸ் ஆகியோருக்குச் சொந்தமான போகஹயாய | 20 0 0 .. | வடக்கு : யமஓயா ; கிழக்கு : இலுக்வத்தை எலவும் ரோட்டும் ; தெற்கு : துல்கிரியாவின் மகாவெலயாய ; மேற்கு : எல். ஜீ. ஹண்டி சிங்கோவிற்கு சொந்தமான ரிட்டிகஹயாயவும், அரசாங்கத்திற்கும், மற்றவர்களுக்கும் சொந்தமான புஜாமுத்தோட்டவும் | சப்ரகமூவா மாகாணம் கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளை, காரியாதிகாரி பிரிவில் ரகலகண்டவின் கிராம சேவகர் பிரிவு |
| 2. | வரக்கப்பொல, அம்பிபுஸ அரிசி ஆலையைச் சேர்ந்த எம். ஏ. எம். அப்துல் வடேட்டுக்கு சொந்தமான புஜாமுத்தோட்ட | 10 0 0 .. | வடக்கு : மாஓயா ; கிழக்கு : எல். ஜீ. ஹண்டி சிங்கோவிற்கும் மற்றவர்களுக்கும் சொந்தமான போகஹயாய ; தெற்கு : எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்குச் சொந்தமான ரிட்டிகஹயாய ; மேற்கு : அமரக்கோண் மூல்ல கிராம எல்லை | சப்ரகமூவா மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல்கோரளை, காரியாதிகாரி பிரிவில் ரகல கண்டவின் கிராம சேவகர் பிரிவு |
| 3. | பஸ்யால மக்கனிக்கொடையைச் சேர்ந்த எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்கு சொந்தமான ரிட்டிகஹயாய | 16 0 0 .. | வடக்கு : எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்கும் மற்றயவர்களுக்கும் சொந்தமான போகஹயாய ; கிழக்கு : துல்கிரியாவின் மகாவெலயாய ; தெற்கு : சி. ஜே. தர்மரத்தினவிற்கும் மற்றவர்களுக்கும் சொந்தமான இல்லுக்கொல்வத்தையும், ஆம்பகஹயாயும் ; மேற்கு : எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்கு சொந்தமான கனிகண்டவும், அமரக்கோன்மூல்ல கிராம எல்லையும் | சப்ரகமூவா மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளை, காரியாதிகாரி பிரிவில் ரகலகண்டவின் கிராமசேவகர் பிரிவு |
| 4. | பஸ்யால மக்கனிகொடையைச் சேர்ந்த எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்குச் சொந்தமான டன்லியட்டவத்தை | 10 0 0 .. | வடக்கு : எம். கிரிபண்டாவுக்கும் மற்றையோருக்கும் சொந்தமான ஹிட்டனவத்தையும் அமரகோன் மூல்லா கிராம எல்லையும் ; கிழக்கு : மக்லின் சமரநாயக்காவிற்கு சொந்தமான அம்பகஹயாய ; தெற்கு : எச். ஏ. முதியன்ஸேக்குச் சொந்தமான ரப்பர் எஸ்டேட்டும் ஜூனைட்டுக்கும் மற்றையோருக்கும் சொந்தமான டன்லியட்டகும்புராவும் ; மேற்கு : சி. ஜே. தர்மரத்னவுக்கும் மற்றையவர்களுக்கும் சொந்தமான தெல்கஹகொட ரப்பர்தோட்டம் | சப்பிரகமூவா மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளை, காரியாதிகாரி பிரிவில் மன்கெதர கிராமசேவகர் பிரிவு |
| 5. | தெனியாய, வரல்ல, குருப்பிலின் எஸ்டேட்டைச் சேர்ந்த மக்லின் சமரநாயக்காவிற்கு சொந்தமான அம்பகஹயாய | 10 0 0 .. | வடக்கு : எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்கு சொந்தமான றிற்றிகஹயாய ; கிழக்கு : சி. ஜே. தர்மரத்னவுக்கும் மற்றையோருக்கும் சொந்தமான இலுக்கொல்லவத்தையும் எல். ஜீ. ஹண்டி சிங்கோவிற்குசொந்தமான றித்தஹயாய ; தெற்கு : சி. ஜே. தர்மரத்னவுக்கும் மற்றையோருக்கும் சொந்தமான இலுக்கல்லவத்தை ; மேற்கு எச். ஏ. முதியன்ஸேக்குச் சொந்தமான ரப்பர் தோட்டமும், எல். ஜீ. ஹண்டிசிங் கோவிற்குச் சொந்தமான தனிலியட்டவும், கனிகந்தவும் | சப்பிரகமூவா மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளை, காரியாதிகாரி பிரிவில், ரகல கண்ட மன்கெதர கிராம சேவகர் பிரிவு |
| 6. | தெனியாய, தெனியாய எஸ்டேட்டைச் சேர்ந்த லிலியன் புளோரன்ஸ் பெரேராவுக்குச் சொந்தமான இலுக்கொல்லவத்தை | 51 0 0 .. | வடக்கு : எல். ஜீ. ஹண்டிக்குச் சொந்தமான றிட்டிகஹயாவும், துல்கிரியவைச் சேர்ந்த மகாவெல்யாயாவும் ; கிழக்கு : கொழும்பு-குருணாகலை பொதுரோட் ; தெற்கு : மலிகத்தென்னே, வேவா அரசாங்க நிலம் ; மேற்கு : நன்கொல்ல நெல்வயல்களும் கிராம மக்களின் காணிகளும் | சப்பிரகமூவா மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல்கோரளை, காரியாதிகாரி பிரிவில், ரகல் கண்ட மன்கெதர கிராம சேவகர் பிரிவு |
| 7. | பஸ்யால, மக்கனிக்கொடையைச் சேர்ந்த எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்கு சொந்தமான கனிகந்த | 6 0 0 .. | வடக்கு : எல். ஜீ. புஞ்சிபண்டாவுக்கு சொந்தமான துல்கிரியாவத்தையும் அமரக்கோன் மூல்ல கிராம எல்லையும் ; கிழக்கு : எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்குச் சொந்தமான ரிட்டிகஹயாய ; தெற்கு : மக்லின் சமரநாயக்காவுக்குச் சொந்தமான அம்பகுஹயாய ; மேற்கு : எம். கிரிபண்டாவுக்கும், மற்றையோருக்கும் சொந்தமான ஹிட்டினவத்தையும் எல். ஜீ. ஹண்டிசிங்கோவிற்கு சொந்தமான தன்லியட்டவும் | சப்பிரகமூவா மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல்கோரளை, காரியாதிகாரி பிரிவில், ரகல கந்த மன்கெதர கிராமாதிகாரி பிரிவு |
| | | 123 0 0 | | |

12-1458

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.